## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.69/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 15 | நாள் | : | 09.03.2026 |
| பெயர் | : | வெள்ளத்தாய் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 09th day of March 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் நெற்கட்டும்செவலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கோமதி முத்துராணி மற்றும் பாண்டியராஜன் ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு உறவினர்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் பிரச்சனை ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் அவர்கள் உறவினர்கள் என்பதால் அவர்களை பார்ப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றேன். கோவில் கொடி ஏற்றுவதில் பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். எதிரிகளும், கோமதிமுத்துராணி மற்றும் பாண்டியராஜா வகையினரும் ஒரு தரப்பகாவும், மற்றொரு தரப்பாகவும் இருந்து பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். கோமதி

முத்துராணியை கோவிலுக்கு அழைக்கக் கூடாதென்று பிரச்சனை இருந்து வந்தது. அதனால் இருபிரிவுகளாக இருந்தார்கள். அதனால் பிரச்சனை ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்றுள்ளார்கள். அன்றைய தினம் நான் ஊரில் இல்லை வேலைக்குச் சென்றுவிட்டேன். எனக்கு காயம் ஏதுமில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 03.05.2016ம் தேதி காலையில் முத்தையா தேவர் மகன் வெள்ளத்துரை தலைமையில் நாங்கள் அனைவரும் புறப்பட்டுச் சென்றோம் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறியபோது லட்சுமணப்பாண்டியன் மகன் மாரிச்சாமி, இராமையத்தேவர் மகன் அசோகன் என்ற வெள்ளத்துரை, இராமராஜா மகன் பொன்னுசாமி, பொன்னையா தேவர் மகன் கோட்டியப்பன், இராஜதேவர் மகன் பாண்டித்துரை, பாண்டித்துரை மனைவி ராஜேஸ்வரி, பாண்டியத் தேவர் மகன் செந்தூர் பாண்டி, குருசாமி பாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சி, சுந்தரய்யா தேவர் மகன் செந்தூர் பாண்டி, சங்கையா தேவர் மகன் சுப்பையா, பெரிய சுப்பையா மகன் உள்ளமுடையார், முத்துப்பாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சாமி, வெள்ளப்பாண்டி மகன் உள்ளமுடையார், தங்கச்சாமி மகன் ராஜா, தமிழ்செல்வன் மனைவி

வெள்ளத்துரைச்சி, முருகன் மனைவி வெள்ளத்துரைச்சி, உள்ளமுடையார் மனைவி பூங்கோடி, முத்துப்பாண்டியன் மகன் வெள்ளத்துரை, இராமபாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சி, சண்முகையா மகன் வெள்ளத்துரை, மற்றும் உடையார், உடையார் மகன் முருகன், கைலாசத்தேவர் மகன் பால்பாண்டி, ஆகியோர் வந்தார்கள் என்று அவர்கள் பெயர் விவரம் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். புண்ட மக்களா கூட்டமாக வந்திருக்கிறிர்கள் எல்லா கூதிவில்லைகளும் இன்றோடு செத்துதொலைங்க என்று கூறி கண்டபடி அடித்தார்கள் என்றும் பாண்டியராஜனும், பொன்னுச்சாமியும் கல்லால் வெள்ளத்துரையை அவதூறாக பேசிக்கொண்டே நீ இத்தோடு செத்து அழிந்துபோ என்று கூறி பாண்டியராஜன் கல்லால் எரிந்தார் என்றும் வெள்ளத்துரைக்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றும் பொன்னுச்சாமி இத்தோடு தொலைந்துபோ என்று கூறி கல்லால் கூறி பார்த்து எறிந்தார் என்றும் அதை வெள்ளத்துரை கையால் தடுத்தபோது வலது உள்ளங்கை மற்றும் நடுவிரல் இடது ஆட்காட்டிவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும் கோட்டியப்பன் கம்பால் இடது முழங்கையில் வெள்ளத்துரையை தாக்கினார் என்றும் லட்சுமணத்துரை மகன் மாரிச்சாமி கம்பியல் தங்கதுரையை பார்த்து தொலைந்துபோ புண்டை மகனே என்று சொல்லி ஓங்கி தலையில் அடித்தார் என்றும் மாரிச்சாமி காசிராஜனை அரிவாளால் தொலைந்துபோ தேவிடியா மகனே என்று தலையை நோக்கி வெட்டினார் என்றும் அதை இடது கையால் தடுத்ததால் காசிராஜனுக்கு இடது கையிலும், புஜம்

பகுதியிலும் இரத்தக்கறை ஏற்பட்டது என்றும் பாண்டித்துரையும், வேலுச்சாமியும் கல்லால் மாறி மாறி தாக்கினார்கள் என்றும் எனவே குருநாதன் இடது கரண்டைக்கால் இடதுகால் முட்டியில் காயங்கள் ஏற்பட்டது என்றும் சுப்பிரமணியத்தாய் கல்லால் கல்யாணித்தாய் மீது அவதூறாக பேசிக் கொண்டே எறிந்தார் என்றும் அசோகன் என்ற வெள்ளத்துரை கண்டாரயோளிகளா என்று சொல்லி ஓங்கி கல்யாணிதாய் தலையில் ஓங்கி அடித்தார்கள் என்றும் பொன்னுச்சாமி மகன் வெள்ளத்துரையிம் கல்யாணிதாய் மீது கல்லால் எறிந்தார்கள் என்றும் கல்யாணித்தாய்க்கு தலையின் பின்புறமும், வலது தோள்பட்டையிலும் கரண்டைக்காலிலும் காயங்கள் ஏற்பட்டது என்றும் உள்ளமுடையார் மகன் மாரிச்சாமி அரிவாளால் என்னை தொலைந்து போ என்று சொல்லி வலது நெற்றி பக்கம் வெட்டினார் என்றும் நாங்கள் உயிருக்கு பயந்து நாலாபுறமும் சிதறி ஓடினோம் என்றும் என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் அங்கு நான் சிகிச்சையிலிருந்தபோது புளியங்குடி காவல் உதவி ஆய்வாளர் நடந்த விவரத்திற்கு என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் வெள்ளத்துரையும் மருத்துவமனையில் இருந்து புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி ராஜேஸ்வரி எனக்கு சித்தி முறை வேண்டும் மற்ற எதிரிகள் எனக்கு உறவினர்கள்தான். எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களை குற்ற வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன்

எனக்கு காயம்பட்ட விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.09 18:49:57 +0530